செய்தி வெளியீடு எண்: 502 நாள் : 18.09.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.9.2013 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தின் கடற்கரையோர மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் 209 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5674 வீடுகளையும், சுனாமி போன்ற அவசர காலங்களில் கடலோர மக்கள் எளிதாகவும் பாதுகாப்பாகவும் வெளியேறுவதற்கு ஏதுவாக 23 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 41 கிலோ மீட்டர் மீட்புவழிச் சாலைகளையும் திறந்து வைப்பதன் அடையாளமாக இராமநாதபுரம் மாவட்டம் – கடலாடியில் கட்டப்பட்டுள்ள புதிய வீடுகளையும், சாலைகளையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மொத்தம் 21 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 382 புதிய கட்டடங்கள் மற்றும் பாலங்களைத் திறந்து வைத்தார்கள்.

கடந்த 26.12.2004–ல் ஏற்பட்ட சுனாமி தாக்குதலில் தமிழக கடற்கரையோரத்தில் இருந்த ஆயிரக்கணக்கான வீடுகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் எளிதில் பாதிப்புள்ளாகும் வீடுகளை சீரமைத்து மீளக்கட்டிட தமிழ்நாடு அரசு 2005–ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவியுடன் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தை தீட்டியது. அதன்படி 11 மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் உள்ள 444 கிராமங்களைச் சார்ந்த, கடல் அலை உயர் மட்ட நிலையிலிருந்து 200 முதல் 1000 மீட்டர் தூரத்திற்குள் இயற்கைச் சீற்றங்களில் எளிதில் பாதிப்புள்ளாகும் வகையில் அமைந்திருந்த 14,364 வீடுகள் கண்டறியப்பட்டு அவற்றை சீரமைத்து மீளக்கட்டித்தர தமிழக அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில், அவசர கால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த வீடுகளில், முதற்கட்டமாக 8251 வீடுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 27.3.2012 அன்று திறந்து வைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, விழுப்புரம் மாவட்டத்தில் 361 வீடுகள், கடலூர் மாவட்டத்தில் 34 வீடுகள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1346 வீடுகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 295 வீடுகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 460 வீடுகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 2000 வீடுகள், திருநெல்வேலி மாவட்டத்தில் 517 வீடுகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 171 வீடுகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 490 வீடுகள், என மொத்தம்

5674 வீடுகள் 209 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள இந்த 5674 வீடுகளை 17.9.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகள் ஒவ்வொன்றின் கட்டட பரப்பளவு 325 சதுர அடி ஆகும். ஒவ்வொரு வீட்டிற்கான மதிப்பீடு சுமார் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயாகும். ஒவ்வொரு வீடும் கூடம், படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை, திண்ணை மற்றும் மாடிப்படிகளுடன் கூடிய வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்த வீடுகள் அனைத்தும் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து காத்திடும் வகையில் 10 ஆண்டுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வீடுகள் அனைத்தும் இயற்கை இடர்பாடுகளான நில நடுக்கம், புயல் மற்றும் ஆழிப்பேரலை போன்றவற்றால் ஏற்படும் தாக்கத்தை தாங்கக்கூடிய தன்மையுடன் கட்டப்பட்டுள்ளன. இவைபோன்ற நிலையான தரமிக்க வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதால் கடலோரத்தில் வசிக்கும் குடும்பங்கள் தங்களது வசிப்பிடம் பற்றிய கவலையினை மறந்து தங்களது வாழ்வாதாரப் பணிகளில் கவனம் செலுத்த வழி ஏற்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் அவரவர் சொந்த இடத்திலேயே வீடுகள் கட்டப்படுவதால், அந்த கட்டுமானக் காலத்தில் வேறு இடத்தில் வாழ்வதற்கு ஆயிரம் ரூபாய் ஒரே தவணையில் இடமாற்றுப் படியாகவும் மற்றும் மாத வாடகையாக 500 ரூபாய் வீதம் 18 மாதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அவசர கால சுனாமி மறு கட்டமைப்புப் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களில் 115 கடலோர கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயனடையும் வகையில் அவசர காலங்களில் கடலோர மக்கள் எளிதாகவும் பாதுகாப்பாகவும் வெளியேறுவதற்கு ஏதுவாக 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய 41 கிலோ மீட்டர் மீட்புவழிச் சாலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.9.2013 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், திருச்சி மாவட்டம் தொட்டியம், நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் ஆகிய இடங்களில் 2 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள்;

கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், நாமக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருப்பூர், விழுப்புரம் மற்றும்

விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 4 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 55 ஊராட்சி அலுவலக கட்டடங்கள்;

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 21 மாவட்டங்களில் 5 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 134 ஒருங்கிணைந்த ஆண்கள் மற்றும் ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகங்கள்;

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருச்சி, திருப்பூர், திருவள்ளூர், திருவாரூர் , விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 26 மாவட்டங்களில் 8 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கட்டடங்கள், பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடி மையங்கள், சமையல் கூடங்கள், மகளிர் சுய உதவிக் குழு கூடங்கள், சமுதாயக் கூடங்கள், பாலங்கள், கலையரங்கம் மற்றும் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் அலுவலகங்கள்;

என மொத்தம், 21 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்கள் மற்றும் பாலங்கள் போன்றவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.9.2013 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு கே.பி. முனுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப., சுனாமி திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநர் (பொறுப்பு) செல்வி அபூர்வா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் திரு. பிரஜேந்திர நவ்நீத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 18.9.2013